1995 மே 5]

இணைப்பு I

(46 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 41-ஓய்வூதியங்களும் ஏனைய ஒய்வு கால நன்மைகளும்.

"2235. சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள்– 60. ஏனைய சமூகப் பாதுகாப்புத் திட்டம் – 102 சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் – ஐ. திட்டத்தில் சேராதது – ஏ.எப். விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் ஓய்வூதியம் முதலியன (த.தொ.கு.எண். 2235 – 60 – 102– ஏ.ஏப். 0005)"

கொள்கை விளக்கக் குறிப்பு

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினர்க்கும், மாநில அரசாலும், மத்திய அரசாலும், ஓய்வூதியங்கள் வழங்கப்படுகின்றன.

மாநில ஓய்வூதியத் திட்டம்

1966 ஆம் ஆண்டுக்கு முன்பு, மத்திய உள்துறை அமைச்சகம், விடுதலை போராட்ட வீரர்களுக்கு நிதி உதவி அளித்து வந்தது. விடுதலை போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்ட நாட்டின் பெரிய மகான்களுக்கு நிதி உதவி வழங்குவது குறித்து மாநில அரசும் பரிசீலனை செய்தது. 1942–ம் ஆண்டு (மற்றும்) 1944–ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற விடுதலை தொடர்பான பல்வேறு போராட்டங்கள் மற்றும் கிளர்ச்சியில் ஈடுபட்டோர் மற்றும் சிறைத்துன்பம் அடைந்தவர்களுக்கும், சிறையில் அடைப்பட்டவர்களுக்கும், கொல்லப்பட்டவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அரசு ஆணை நிலை எண் 2064 பொதுத் துறை, நாள் 28.9.1966–ல் மாநில அரசு அறிவித்தது. இந்த ஓய்வூதியத் திட்டம 1.10.1966 முதல் அமுலுக்கு வந்தது.

2. திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது தேசிய இயக்கத்தில் பங்கு கொண்டதற்காக மூன்று மாத காலத்திற்கு குறையாமல் சிறையில்

[1995 மே 5

அடைக்கப்பட்டவர்களும் காவல் கைதியாக இருந்தவர்களும் இயக்கத்தில் ஈடுபட்டபோது கொலை செய்யப்பட்டவர்களும், ஆயுள் தண்டனை அடைந்தவர்களும், துப்பாக்கிச் சூட்டிலும்,. அடிதடியிலும் கை கால் இழந்தவர்களும் அரசியல் ஓய்வூதியம் பெற தகுதி உடையவர்களாக இருந்தனர். பிறகு, இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியோரும் 1946ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களும், மதுரை சதித் திட்டத்தில் துன்பப்பட்டவர்களும், அரசியல் ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவர்கள் என அறிவிக்கப்பட்டது.

3. ஓய்வூதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட சிறைத்தண்டனை காலம் மூன்று மாதம் என்பது 1.4.1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. அரசியல் ஓய்வூதியம் பெறுவதற்கு ஆரம்ப காலத்தில் வருமான வரம்பு விதிக்கப்பட்டது. 11.3.1983 முதல், அந்த வருமான வரம்பு நீக்கப்பட்டது.

4. அரசியல் ஓய்வூதியம் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் நீதி மன்ற ஆவணமோ (அல்லது) சிறைத்துறை ஆவணமோ சமர்ப்பிக்க வேண்டும். பின்னர், இந்த நிபந்தனைக்குப் பதிலாக முன்னாள் பாராளுமன்ற (அல்லது) சட்டமன்ற உறுப்பினர் வழங்கும் சான்றிதழ்களையே சிறைத் துன்பம் அடைந்ததற்கான ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இருப்பினும், அரசு (நிலை) எண்–2015 பொதுத்துறை, நாள் 15.11.1988ல், இத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. அதன்படி, 15.10.88 அன்று 70 வயது (அல்லது) அதற்கு மேற்பட்ட வயது உடையவராக இருக்க வேண்டும். சிறைத் துன்பம் அடைந்ததற்கு சான்றாக சக கைதி சான்றிதழ் அளிக்க அரசால் அங்கீகரீக்கப்பட்ட 15 விடுதலைப் போராட்ட வீரர்கள் எவரேனும் இருவரிடமிருந்து சக கைதி சான்றிதழ்களைப் பெற்று அனுப்ப வேண்டும.

5. அரசியல் ஓய்வூதியதாரர், தனது மரணத்திற்குப் பின் தனது மனைவி/கணவனை வாரிசாக நியமனம் செய்து தொடர் ஓய்வூதியம் பெறலாம்.

6. தொடக்கத்தில் அரசியல் ஓய்வூதியம் ரூ. 50/- ஆக இருந்தது. இத்தொகை பின்னர் படிபடியாக கீழ்க்கண்டுள்ளவாறு உயர்த்தப்பட்டது:--

1995 மே 5]

கால அளவு		ஒய்வூதியத் தொகை
		ரூ.
(1) 1.10.1966	முதல்	50
(2) 15.8.1972	முதல்	75
(3) 1.4.1979	முதல்	100
(4) 25.1.1981	முதல்	150
(5) 10.6.1986	முதல்	250
(6) 1.819.89	முதல்	350
(7) 1.1.1991	முதல்	400
(8) 1.8.1992	முதல்	1000

7. மத்திய அரசு ஓய்வூதியம் பெறுவோர்க்கும், 15.8.1972 முதல் மாதம் ரூ. 75 வீதம் மாநில ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. 25.1.1981 முதல் இது ரூ. 100 ஆக உயர்த்தப்பட்டது.

8. "வெள்ளையனே வெளியேறு" இயக்கம் பொன் விழா ஆண்டினை ஒட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசியல் ஓய்வூதியத்தை கீழ்க்கண்டவாறு உயர்த்த ஆணையிட்டார்கள்:--

(அ) மாநில அரசின் ஓய்வூதியம் ரூ. 400-லிருந்து ரூ. 1,000 ஆக உயர்த்தப்பட்டது.

(ஆ) மத்திய அரசின் ஒய்வுதியம் மட்டும் பெறுபவர்களுக்கு தற்போது மாநில அரசு நிதியிலிருந்து மாதம் ரூ. 250 வழங்கப்படுகிறது.

(இ) மத்திய ஓய்வூதியம் பெற்று வந்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு வழங்கி வந்த ஓய்வூதியத் தொகை ரூ. 100லிருந்து ரூ. 250 ஆக உயர்த்தப்பட்டது.

(ஈ) விடுதலை போராட்ட வீரர்கள் இறந்த பிறகு அவரது வாரிசுகளின் தொடர் ஓய்வூதியம் ரூ. 400லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டது.

[1995 மே 5

9. நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றிய பல முக்கிய பிரமுகர்களுக்கும், அவர்களின் வாரிசுகளுக்கும், சிறப்பு மான்ய தொகை ஒய்வூதியமும், அரசு வழங்கியுள்ளது. சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர் 202 பேருக்கும், வீரபாண்டி கட்ட பொம்மன் வாரிசுதாரர் 10 பேருக்கும் மாத ஓய்வுதியமாக ரூ. 150 வழங்கப்பட்டு வருகிறது.

10. விடுதலை போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் அவரது குடும்பத்தினர்க்கும் வழங்கப்பட்டு வரும் மற்ற சலுகைகள் பின் வருமாறு:--

(அ) 1.8.1989 முதல்

(1) மாநில/மத்திய ஓய்வூதியம் பெற்று விடுதலைப் போராட்ட வீரர்கள் இறந்தால், அவரது இறுதி சடங்குகளுக்காக அவர்களுடைய மனைவி (அல்லது) நேரடி வாரிசுதாரர்களிடம் ரூ. 1,000 வழங்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட வட்டாட்சியரால் இத்தொகை பட்டுவாடா செய்யப்படுகிறது.

(2) விடுதலை போராட்ட வீரர்கள் மறைவுக்கு மரியாதை செலுத்தும் வகையில், வட்டாட்சியர் அந்தஸ்துக்கு குறையாத அதிகாரியால் அரசு சார்பில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்யப்படுகிறது.

(ஆ) மாநில (அல்லது) மத்திய ஓய்வூதியம் பெறுபவர்கள் இரண்டு ஓய்வுதியங்களும் பெறுபவர்கள் மற்றும் தொடர் ஓய்வூதியம் பெறுபவர்கள் ஆகிய அனைவருக்கும் மருத்துவப்படியாக மாதம் ரூ. 15/– 1-8-90 முதல் வழங்கப்படுகிறது.

(இ) மருத்துவ வசதி

மத்திய(அல்லது) மாநில அரசு ஓய்வுதியம் பெறும் விடுதலை வீரர் (அல்லது) அவரைச் சார்ந்தவர் அரசு மருத்துவ மனையில் சிகிச்சையும் 'பி' வகுப்பில் படுக்கை வசதியும் பெறுகிறார்கள்.

(ஈ) கல்விச் சலுகை

விடுதலை வீரர்களின் பிள்ளைகளுக்கு பட்ட மேற்படிப்பு வரையில் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. பொறியியல் பட்டப் படிப்பில் ஓர் இடமும் (1980–81 முதல்) மருத்துவக் கல்லூரிகளில் 3

1995 மே 5]

இடமும், சித்த மருத்துவம் பயில ஓர் இடமும், பாலி டெக்னிக்/சிறப்பு நிறுவனங்களில் 1 இடமும், விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

(உ) வீட்டு வசதி

வீட்டு வசதி வாரியத்தால் வழங்கப்படும் வீடு/வீட்டு மனை/ குடியிருப்பு தள ஒதுக்கீட்டில் 1 சதவிகிதம், விடுதலை போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஊ) போக்குவரத்து சலுகைகள்

மாநில (மற்றும்) மத்திய இரு ஓய்வூதியர் தமிழகத்திலுள்ள அனைத்து போக்குவரத்து கழக பேருந்துகளிலும், இலவசமாக பயணம் செய்ய ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இச்சலுகை மத்திய ஓய்வூதியம் மட்டும் பெறுபவர்களுக்கும், 21.8.92 முதல் அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு ஓய்வூதியத் திட்டம்

இத்திட்டம் 15.8.1972 முதல் மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1.8.1980 முதல் "சுதந்திரத்தா சைனிக் சம்மன் பென்ஷன் திட்டம்" என்ற பெயரில் திருத்தியமைக்கப்பட்டது.

அ) ஓய்வூதியதாரர்களின் ஆண்டு உச்ச வருமான வரம்பு ரூ. 5,000/- 1.8.1980 முதல் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது.

(ஆ) தாழ்த்தப்பட்டோர், மலைச்சாதியினர் மற்றும் பெண் விடுதலைப் போராட்ட வீரர் ஆகியோரைப பொறுத்தமட்டில் சிறைத் தண்டனை அனுபவித்த காலம் 6 மாதத்திலிருந்து 3 மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(இ) தலைமறைவாக இருந்ததற்குச் சான்றாக அரசு ஆணனங்கள் கிடைக்கப் பெறாதோர், 5 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்துள்ள பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர்களின் சான்றிதழ்களைத் தக்க ஆதாரமாக சமர்ப்பிக்கலாம் என்று இருந்ததை தற்போது 2 ஆண்டுகளாகக் குறைத்து, சான்றிதழ் அளிப்பவர் மனுதாரரின் மாவட்டத்தைச் சார்ந்தவராக இருத்தல வேண்டும் என்று ஆணையிடப்பட்டு உள்ளது.

[1995 மே 5

(ஈ) முன்னாள் அல்லது தற்போதைய சட்டமன்ற அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடமிருந்து மட்டுமே பெற வேண்டும் என்று இருந்ததை ஓராண்டிற்குக் குறையாமல் சிறைத்தண்டனை பெற்று, மைய அரசால் தாமிர பத்திரமும், ஓய்வூதியமும் பெறுபவரிடமிருந்து பெறலாம் என மாற்றப்பட்டுள்ளது.

(உ) 10 சவுக்கடிகள் அல்லது பிரம்படிபட்டு ஒருவர் துன்பப்பட்டிருந்தால் அது ஆறு மாதத்திற்குச் சிறைத் தண்டனை அனுபவித்ததற்கு ஈடாகக் கருதப்படும்.

(ஊ) 1.6.85 முதல் மத்திய ஓய்வுதியம் ரூ. 500/- ஆகும். இத் தொகை 14.11.88 முதல் ரூ. 750/- ஆக உயர்த்தப்பட்டது. 12.8.92 முதல் ரூ. 1,000/- ஆகவும், 2.10.94 முதல் 1,500/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

12. ஓய்வூதியம் பெறுபவர்கள் விபரம்:--

(1) மாநில ஓய்வூதியம் பெறுவோர்	3,125
(2) மத்திய ஓய்வூதியம் பெறுவோர்..	799
(3) மாநில மற்றும் மத்திய ஓய்வூதியம் இரண்டும் பெறுவோர்	1,566
(4) மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலை வீரர்களின் வாரிசுகள்	2,836

இத்திட்டத்திற்காக 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 7,52,83,000/-ம் 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 7,90,48,000/-ம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.